Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (2-10-65) இதழ் 232

வசுவாவசு புரட்டாதி 16 ஜ: ஆகிர் பிறை 6 சனிக்கிழமை




## பாகிஸ்தான் வானொலியில் தமிழ்

கொழும்பு, வெள்ளி

பாகிஸ்தான்வானொலியில் தமிழில் செய்தியும் ஐந்து நிமிஷநேர தமிழ் இசையும் ஒலிபரப்ப ஆரம்பித்திருப்பதாக கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரக செய்திக்குறிப்பு ஒன்று கூறுகிறது. இந்நிகழ்ச்சி செப்டம்பர் மாதம் 27-ந் திகதி ஆரம்பிக்கப்பட்டதாம். மாலை 5 மணி 5 நிமிஷத்துக்கு இந்நிகழ்ச்சி 25, 16 மீட்டர்களில் ஒலிபரப்பப்படுகிறது, விரைவில் சிங்களத்திலும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுமாம்.

# சுகர்ணோவை வீழ்த்த ராணுவம் சதி

## 20 இந்தோனேஷிய ஜெனரல்கள் இதுவரை கைதாயினர்

### அமெரிக்க உடந்தையுடன் சதி நடைபெற்றதாம்

### புதிய புரட்சிசபை ஆட்சிநடத்தும்

ஜாகர்த்தா, அக். 25

இந்தோனேஷிய ஜனுதிபதி டாக்டர் சுகர்ணோவைப் பதவியிலிருந்து வீழ்த்த நேற்று நடைபெற்ற சதிமுயற்சி முறியடிக்கப்பட்டதாக ஜாகர்த்தா ரேடியோ அறிவித்தது. இதுசம்பந்தமான ஏராளமாக ராணுவ ஜெனரல்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும் அது அறிவித்தது.

சுகர்ணோ அரசாங்கத்தை வீழ்த்த நடைபெற்ற சதி முயற்சியில் இதுவரை 20 ஜெனரல்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும், நாடு எங்கும் மற்றும் பலர் கைது செய்யப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவின் உள்நாட்டு, வெளிநாட்டுத் தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் ஜனுதிபதி சுகர்ணோவின் மாளிகைக்கு வெளியே பலத்த காவல் போடப்பட்டிருப்பதாகவும் மலேஸிய ஒலிபரப்பொன்று கூறியது.

ஜனுதிபதி சுகர்ணோ பத்திரமாக இருக்கிருர் என்றும், ஆனுல் ஜாகர்த்தாவிலும், பிராந்தியங்களிலும் புரட்சி சபைகள் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், அரசாங்கத்தில் நிலையான கொள்கையை அது அமுல் நடத்துமென்றும் அறிவிக்கப்பட்டது.

அடுத்த செவ்வாய்க்கிழமை இந்தோனேஷியாவின் ராணுவதினம் கொண்டாடப்படுவதற்கு முன், சுகர்ணோவை வீழ்த்த ராணுவத்தினர் சிலர் அமெரிக்க உளவு இலாகாத் துணையுடன் இந்தச்சதியில் ஈடுபட்டதாய்க் கூறப்பட்டது.

சண்டை எதுவும் நடைபெறவில்லை. ஆனுல் முக்கிய இடங்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

ஜாகர்த்தாவின் இந்த ஒலிபரப்புச் செய்தி வாஷிங்டனில் கேட்டதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர்.

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518. தந்தி: 'யப்பான்'

## துப்பாக்கி முனையில் துணிகரத திருட்டு

வெலிகம, வெள்ளி

வெலிகமஎன்ற இடத்தில் முகமூடி தரித்த கொள்ளைக் கூட்டத்தினர் நேற்றிரவு ஒரு டாக்டரின் வீட்டுக்குச் சென்று தாம் ஒரு நோயாளியை சிகிச்சைக்கு கொண்டுவந்திருப்பதாகபாசாங்கு பண்ணி டாக்டர் திரு. பி. ஏ. சி. கொடிப்பிள்ளையையும் அவரது மனைவியையும் கயிற்றினுல் கட்டியபின் வாயுள் துணிகளைத் திணித்து விட்டு 25,000 ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கப் பணத்தையும் திருடிச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த இருவர் டாக்டரின் வீட்டிலுள்ளவர்களை துப்பாக்கி முனையில் பயமுறுத்திக்கொண்டு நிற்கையில் இக் கோஷ்டியைச் சேர்ந்த மற்றவர்கள் வீட்டிற்குள்சென்று சூறையாடினர் எனத் தெரியவருகிறது. உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பஸ்தியாம்பிள்ளைவிசாரணை நடத்திவருகின்ருர்.

## தேசியசுவீப் முடிவுகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசியசுவீப் முடிவுகள்:

முதலாவது பரிசு
13 Z 0924 ரூ 35,600.00

இரண்டாவதுபரிசு
02 B 0150 ரூ. 14,240.00

மூன்ருவது பரிசு
02 T 0444 ரூ. 3, 560.00

(5-ம் பக்கம் பார்க்க)

## நாலு நாட்களில் வழமையான சேவை

### தபால்பகுதி மேற்பார்வையாளர் அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

தபால் பட்டுவாடா வேலைகள் வழமையான நிலைக்கு விரைவில் கொண்டுவரப்படும் என்றும் வரும் செவ்வாய்க்கிழமையளவில் வழமையான சேவை செய்யக்கூடியதாக இருக்குமென்றும் தபால் பகுதி மேற்பார்வையாளர் திரு. ஓவன் குணவர்த்தனு தெரிவித்துள்ளார்.

சென்ற 3 நாட்களாக நடைபெற்றுவந்த தபால் ஊழியரின் வேலைநிறுத்தத்தினுல் விநியோகிக்கப்படாமல் தேங்கிக்கிடந்த பல லட்சக்கணக்கான கடிதங்கள் நேற்று வேலைநிறுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து அந்தந்த இடங்களுக்கு 4 நடமாடும் தபாற்கந்தோர்கள்மூலம் அனுப்பப்பட்டன.

## காந்தி ஜயந்திவிழா

யாழ்ப்பாணம், சனி

இன்றுமாலை 6 மணிக்கு மகாத்மாகாந்தி ஜெயந்தி விழாவை மறுமலர்ச்சிமன்றம் சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் கொண்டாடவிருக்கிறது.

இவ்விழாவில் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, வித்துவான் புலவர் வேல்மாறன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். இசை நடன நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## இசைக்கச்சேரி

யாழ்ப்பாணம், சனி

ஸ்ரீ சந்தியாவந்தனம் ஸ்ரீநிவாசராவின் இன்னிசைக் கச்சேரி இன்று மாலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும்.

## 5 மாகாணங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

கொழும்பு, வெள்ளி

கொழும்பு, காலி, மாத்தறை, களுத்துறை, நீர்கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள ஆசிரியர்களின் சேவை விபரங்களைத் திரட்டும்படி, இந்த ஐந்துமாகாணங்களிலுமுள்ள உதவி வித்தியாதிபதிகளுக்கு கல்வி இலாகா உத்தரவிட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள ஆசிரியர்களுக்கென அடுத்தவருடம் ஜனவரி மாதம் முதல் இடமாற்றத் திட்டமொன்றைத் தயாரிக்கும் நோக்கத்துடனேயே இவ்விபரங்களைத் திரட்டும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் நான்கு வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவதற்கு அருகதையுடையவர்கள் என்று கல்விஇலாகா கருதுகிறது. கல்விஇலாகா கேட்டுள்ள விபரங்களைத் தெரிவிப்பதற்கு இப்பகுதி ஆசிரியர்களுக்கு படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## "தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் ஏற்கவேண்டும்"

### இ. தொ. கா. சிபார்சு

கொழும்பு, வெள்ளி

"தனியார் பாடசாலைகளுட்பட தோட்டப்பகுதிப் பாடசாலைகள் அனைத்தையும் அரசாங்கம் ஏற்கவேண்டும்" என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தேசிய அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்துள்ளது. இத்தகவலை இ. தொ. கா. தலைவரும்நியமன எம். பி. யுமான திரு. எஸ். தொண்டமான் கொட்டகலையில் நடைபெற்றதமிழ்விழாவில் தெரிவித்தார்.

தோட்டப் பாடசாலைகள் அனைத்துக்கும் சிறந்த கல்வி வசதி அளிக்கப்படவேண்டுமென்றும் இதை நிறைவேற்றுவதே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நோக்கமென்றும் திரு. தொண்டமான் கூறினுர்

முன்னைய கூட்டரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களையும் தோட்டப்பகுதிச் சிறுவர்களின் கல்வியையும் முற்ருகப் புறக்கணித்ததென்றும் அவர் சொன்னுர்.

## பஸ் கட்டண சலுகை!

உடுப்பிட்டி, வெள்ளி

பல்கலைக்கழகப் புகுமுக மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது போன்று இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும் பஸ்களில் கல்லூரிக்குப் பிரயாணம் செய்வதற்கு அரைக்கட்டணச் சீசன் டிக்கட் சலுகை வேண்டும் என்று கோரி வடமராட்சி பஸ் பிரயாணிகள் சங்கத்தின் சார்பிலும் கொக்குவில் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் சார்பிலும் தூதுக்குழுவொன்று இ. போ. ச. டைரக்டர் திரு நீதிபாலாவைக் கடந்த இருவாரங்களுக்கு முன்னர் பேட்டி கண்டனர். அப்போது அவர்கள் சமர்ப்பித்த மகஜரைப் பரிசீலித்து உடனடியாகத் தாம் ஆவன செய்வதாக வாக்களித்த டைரக்டர் இதுவிஷயமாக எதுவித முயற்சியும் மேற்கொள்ளவில்லையென்றும் இதனுல் ஏழை மாணவர்கள் பெரிதும் கஷ்டமடைந்துள்ளனரென்றும் இவ்வரைக் கட்டணச் சலுகையை அவர்களுக்கு உடனடியாக வழங்கும்படியும் கோரும் மகஜரை வடமராட்சி பஸ்பிரயாணிகள் சங்கம் மீண்டும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

## புங்குடுதீவில் சோலைவரிக்கு எதிர்ப்பு

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவுக் கிராம சபையினர் சோலைவரி அறவிடத் தீர்மானிப்பதற்கு கிராமமக்களிடையே எதிர்ப்பு உருவாகியுள்ளதாக அறியப்படுகிறது.

தீவுப்பகுதியின் வேறெந்தக் கிராமசபைகளிலுமில்லாத சோலைவரி, பொருளாதார வசதியற்ற புங்குடுதீவிற்கு ஏற்றதல்லவென இருபதுபேர் கையொப்பமிட்டுத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளனர்,

ஸ்தல ஸ்தாபன மந்திரிக்கும், தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினருக்கும் சோலைவரியை எதிர்த்து முறையீடுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கி ச. வட்டார இடைத் தேர்தல்

ஊர்காவற்றுறை, வெள்ளி

நாரந்தனைக் கிராமசபையின் இரண்டாம் வட்டாரத்திற்கான இடைத்தேர்தல் இம்மாதம் 8-ந் திகதி நடைபெறுமென தேர்தல் பகுதியினர் அறிவித்துள்ளனர். இத்தேர்தலில்ஐந்துபேர்கள் போட்டியிடுகின்றனர்.

### மணிவாக்கு

கருணைக் கடலான தெய்வம் தன் பக்தர்களிடையே எவ்வித வேற்றுமையும் காட்டுவதில்லை. உண்மையான இந்துக்களாக நீங்கள் இருப்பின் யாரையும் தீண்டாதாரென்று கருதமாட்டீர்கள்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதி ௴ 16 ௳ (2-10-65)

# மகாத்மாகாந்தி ஜயந்தி

மகாத்மாகாந்தி இன்று உயிருடன் இருப்பின் இந்திய-பாகிஸ்தான் சண்டையைப்பற்றி என்ன நினைப்பார்? இதைத் தீர்க்க என்ன வழி சொல்லுவார்? அவரது ஜயந்தி விழா நடைபெறும்இன்று பலர் மனதிலும் இந்த முக்கிய கேள்விகள் எழக்கூடும்.

மத, வகுப்புவாதஅடிப்படையில் இந்தியாவைப் பிரிக்கப்படாதென்றும், அப்படிப் பிரித்தால் இருபகுதிகளுக்கும் தற்கொலை, சண்டை மூளவே செய்யுமென்றும் எச்சரித்து வந்தார். பஞ்சாபையும், வங்காளத்தையும் பிளக்கக் கூடாதென்றும் கூறினார். ஆனால் அவரது யோசனை அம்பலமேறவில்லை. அதற்கு மாறாக இந்தியா மத வகுப்புவாத அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அவர் அஞ்சியதுபோல் இன்று சண்டையிட்டுக் கொண்டுள்ளன. இந்தக் கண்ணராவியைப் பார்க்க அவர் பெரும் வெட்கமும் துக்கமும்படுவார்.

பிரிவினையனா இரு பகுதிகளுக்கும் போர் நடப்பின் ஏகாதிபத்திய வல்லரசுகள் தலையிட்டு மீண்டும் நாடு அடிமைப்படும் என்றும் எச்சரித்தார் அவர். அந்த ஆபத்து இப்போது அதிகரித்து வருவதைப் பார்க்கின்றோம். இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரமடைந்தபின் பரஸ்பரம் ஒத்துழைத்திருப்பின் இரு நாடுகளும் எவ்வளவோ முன்னேறி மக்களின் வாழ்க்கையும் மேம்பட்டிருக்கும். ஆனால் சில வெளிவல்லரசுகள் குறுக்கிட்டு, இரண்டுக்கும் மித்ரபேதம் செய்து சுயநலத்துடன் தூபம் போட்டு வருகின்றன. அரசியல் விடுதலைக்காக மகாத்மாவின் தலைமையில் இந்திய மக்கள் பெருந் தியாகங்கள் செய்து போராடுகையில் இந்த வெளிவல்லரசுகள் எவ்வித உதவியும் அனுதாபமும் காட்டவில்லை. அரும்பாடுபட்டு சுதந்திரம் பெற்றபின், சில வல்லரசுகள், இருநாடுகளுக்கும் அமைதி ஏற்படுத்துவதைவிட்டு, சண்டையை வளர்த்து வருவதைப்பற்றி இருநாட்டுத் தலைவர்களும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இன்றேல் மகாத்மா கூறியதுபோல், பெற்ற சுதந்திரத்தை இருநாடுகளும் இழந்து மீண்டும் அடிமைப்பட நேரிடும்.

இவ்வளவு நெருக்கடியில் மகாத்மாவுக்கு ஒரு விஷயம் மிக மகிழ்ச்சியைக் கொடுக்கும். மத, வகுப்புக் கலகங்கள் கிளம்பி இரு நாடுகளிலும் பெரும் நாசமும் குழப்பமும் ஏற்படுமென்று வெளியார் பலர் ஆவலுடன் எதிர்பார்த்தனர். வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டிருப்பின் அதனால் ஏற்படக்கூடிய விபரீத விளைவுகளை எண்ணவும் மனம் கூசுகின்றது. நல்ல வேளையாக அப்படி எதுவும் இதுவரை ஏற்படவில்லை. இனியும் ஏற்பட மக்கள் அனுமதிக்காமல், மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

அங்குமட்டுமல்ல. இலங்கையிலும் மத, வகுப்பு துவேஷங்களை மூட்டிவிட சில விஷம சக்திகள் சென்ற சில வருஷங்களாக முயன்றன. கலகங்கள் கிளம்பி, பலகஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டன. நாட்டின் இரண்டாவது பெரிய சமூகமான தமிழருக்கு ஆட்சியிலே சுமார் பத்து வருடங்களாக இடமில்லாமற் செய்யப்பட்டது. மதம், மொழி என்ற வெறிகள் கிளப்பப்பட்டன. நல்ல வேளையாக, பொதுமக்கள் இதன் ஆபத்தை உணர்ந்து, தேர்தல் மூலம் தக்க தீர்ப்பளித்தார்கள்.

இதன் பயனக இந்நாட்டிலுள்ள எல்லாச சமயத்தவரும் வகுப்பினருமடங்கிய ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட முடிந்தது. இந்தப் புதிய தேசிய ஒற்றுமையைப்பற்றி செனட் சபையில் நீதிமந்திரியும் பெருமையுடன் பேசியுள்ளார். பொது மக்களிடையிலும் இதனல் ஒரு புதிய நம்பிக்கை நிலவுகின்றது. நமது ஒற்றுமைக்கும், அமைதிக்கும் உலைவைக்கக்கூடிய எந்த விஷம சக்திகளுக்கும் இடமளிக்காமல், பல சமயத்தவரிடையேயும், வகுப்பினரிடையேயும் சமரசத்தையும், ஒற்றுமையையும் வளர்க்கக் கூடுமான முயற்சிகளைச் செய்ய வேண்டியது பலவிதங்களிலும் அவசியமாகும். இந்தியா — பாகிஸ்தான் சச்சரவுகள் நமக்குப் பெரிய எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மகாத்மா ஜயந்தியை இன்று கொண்டாடும் விஷயமாக ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள ஒரு வேண்டுகோளில், இந்து, முஸ்லீம், சீக்கியர், பௌத்தர், கிறிஸ்தவர், யூதர், பார்ஸிகள் இவர்களிடையே ஒற்றுமையைப் பலப்படுத்த உழைக்க வேண்டுமென்றும், பீதிகாரணமாகவன்றி, தீவிர ஒத்துழைப்பு மூலம்இதைச் சாதிக்க வேண்டுமென்றும், எல்லா தேசத்தவரும் மதத்தவரும் சகோதர சகோதரிகள் போல், அமைதியாக, நல்லெண்ணத்துடன்வாழ பிரார்த்தனை செய்து அதற்காக உழைக்க வேண்டுமென்றும், மகாத்மாகாந்தியின் பெயரால் பிரார்த்தனை தினமாக அனுஷ்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார். பிரார்த்தனையில் பூரண நம்பிக்கை கொண்டவர் மகாத்மா. கூட்டுப் பிரார்த்தனை நடத்தி, நாட்டுக்கு விடுதலையும் பெற்றுத்தந்தார் அந்த மகான். அப்புனிதர் அவதரித்த இப்பொன்னளில், அவர் காட்டிய நெறிகளை நன்றியுடன் நினைவுகூர்ந்து அதன்படி நடப்பதாயின், இன்றுள்ள இன்னல்கள் தீரவும், மக்கள் சுபீட்சமாக வாழவும் வழி பிறக்கும்.

# உண்மையான இந்துவின் கடமை என்ன?

— மகாத்மாகாந்தி —

**சமய சமரசம், சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு, ஆலயத்தூய்மை, சகிப்புத்தன்மை, பரந்த மனப்பான்மை இவையெல்லாம் உண்மையான இந்துவுக்கு அவசியம் என மகாத்மாகாந்தி 28-11-27ல் யாழ்ப்பாணத்தில் இந்துமக்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். அவர் அப்போது நிகழ்த்திய உரையின் சாரம் அவரது ஜெயந்தியை முன்னிட்டு இங்கு வெளியிடப் பட்டுள்ளது.**

"ஒரு நாளில் 24 மணி நேரமும் நான் உண்மையையே பின்பற்ற விரும்புகிறேன். இதனை வெளிப்படுத்தியபின வைதிக இந்து என்ற முறையில் நான், உங்களுக்கு நீங்கள் யாழ்ப்பாணத்துக்கும், இலங்கைக்கும் ஆற்றவேண்டிய கடமை என்னவென்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு நீங்கள் ஆற்றவேண்டிய கடமை என்னவென்பதை முதலில் கூறவிரும்புகிறேன். இலங்கையில் பெரும்பான்மையாகவாழும் பௌத்த சமயத்தவர்கள் உங்களது சகமதத்தவர்கள். இதனை அவர்கள் விரும்பினல் மறுக்கலாம். பௌத்தமதம் இந்துமதம் அல்லவென அவர்கள் கூறலாம். இதில் ஒருபகுதி சரியாகவும் இருக்கலாம். பௌத்தமதம் இந்துமதத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை அதிகமான இந்துக்கள் மறுப்பார்கள். பௌத்த மதத்தை இந்தியாவிலிருந்து வெளியேற்றிவிட்டதாகக் கூறுவதில் பெருமிதம் கொள்வார்கள். ஆனல் அவர்கள் அப்படியொன்றும் செய்யவில்லையென நான் கூறுவேன். புத்தபிரான் ஒரு இந்துசமயத்தவரே. இந்துமதத்தை சீர்திருத்த முயன்றவர் புத்தபிரான். அவர் அந்த முயற்சியில் வெற்றியும் கண்டார். புத்தர்போதித்த நல்லுபதேசங்களை எல்லாம் அப்போது இந்துமதம் தன் அகத்துள்ளாக்கியது. இதனல் இந்துமதம் விரிவடைந்ததென நான் குறிப்பிட விரும்புகிறேன். பௌத்த மதத்திலுள்ள நல்ல அம்சங்களை எல்லாம் எடுத்துக்கொண்ட பின்னர் புத்தபிரானின் போதனையுடன் சேர்க்கப்பட்ட வெறுக்கத்தக்கவற்றை எல்லாம் இந்துமதம் இந்தியாவிலிருந்து வெளியேற்றிவிட்டது என்பது உண்மைதான். நீங்கள் விரிவான இந்துமத வாழ்க்கையை வாழ்வதன் மூலமே இலங்கையிலுள்ள பௌத்த மதத்தவர்களுக்கு உண்மையை புலனக்கலாம்.

ஏதுமறியாத மிருகங்களைப் பலியிடுவதன் மூலம் உண்மையான கடவுளைத் தரிசித்துவிடமுடியாதெனப் புத்தபிரான் போதித்தார். கடவுளுக்குக் காணிக்கை செலுத்துகிறேமென்ற நம்பிக்கையில் மிருகபலி செய்பவர்கள் சந்தேகமின்றிப் பாவிகளேயெனப் புத்தபிரான் உணர்த்தினர். உண்மையான இந்துவாக வாழவிரும்புபவர்கள் இதை மனதில்கொண்டு எந்தக் கோவிலிலும்மிருகபலிஇடம் பெருது பார்த்துக்கொள்ள வேண்டும். ஆலயத்தில் மிருகபலியிடுதல் பாவமானது என்பதை இந்தியாவிலுள்ள சகல இந்துக்களுக்கும் வற்புறுத்திக்கூற நான் தயாராக இருக்கிறேன்.

## சமூக ஏற்றத்தாழ்வு மிகப் பிழையானது

இந்து மதத்தை அரித்து வந்த சாதிப்பாடுபாட்டை அறவே ஒழித்தவர் புத்தபிரான். நீங்களும் உங்கள் மத்தியில் நிலவும் சமூக ஏற்றத்தாழ்வை ஒழித்துவிடுங்கள். பௌத்தமத மக்கள் மத்தியில் புனிதமான இந்து மத வாழ்க்கையை நீங்கள் வாழ்வதாக இருந்தால் சாதிப்பாகுபாட்டைஅறவே கைவிட்டுவிடுங்கள். இந்துக்களிடமிருந்து துரதிர்ஷ்டவசமாக இலங்கையிலுள்ள பௌத்த மதத்தவர்களையும் இந்தப் பாவதோஷம் பீடித்துள்ளது. சாதிப்பாகுபாடே இருக்கக்கூடாத ஒரு சமூகத்தவரிடம் இந்தச் சாதிப் பாகுபாடுஇருக்கிறது. சமூக ஏற்றத்தாழ்வை தெய்வ நீதிக்காக மறந்து சகலரும் இந்துக்கள் என்பதை நினைவில்கொண்டு சகோதரர்களாக வாழுங்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு இந்துமதத்தவர், இங்குள்ள சில ஆலயங்களில் சதுர்க்கச்சேரி நடைபெறுவதாக எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். இது உண்மையாக இருந்தால் தெய்வம் விளங்கும் ஆலயங்களை விபசாரவிடுதிகளாக ஆக்குகிறீர்களென்றே கூறவிரும்புகிறேன். ஆலயங்கள் புனிதமாக இருப்பதற்குச் சில ஒழுங்கு விதிமுறைகள் அவசியம். நீங்கள் நல்ல இந்துக்களாக வாழவிரும்பினல் ஆலயங்களில் சாதிப்பாகுபாட்டை நீக்கி எல்லோரும் வழிபடத் திறந்துவிடுங்கள். கடவுளுக்குப் பக்தர்களிடம் பாகுபாடு கிடையாது. இதயத்தூய்மையோடு யார் வழிபடுகிருர்களோ அவர்களது வழிபாட்டை இறைவன் ஏற்றுக்கொள்கிருன்.

## சமய சமரசம்

கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் மற்றும் மதச்சார்புள்ளவர்கள் மத்தியில் நீங்கள் வாழவேண்டியுள்ளது. சகிப்புத்தன்மையும், தாராளசிந்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது இந்துமதம். இவையில்லாதது இந்துமதமாக இருக்கமுடியாதென்பதை நான் வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன். எனவே மற்ற மதத்தவர்களை உங்கள் சொந்தச் சகோதரர்கள் போலப் பாவித்து நடந்துகொள்ளுங்கள் எனக் கேட்டுக்கொள்கிறேன்."

---

## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், சனி

சென்னை சர்வகலாசாலை சங்கீதசிரோமணியும் அடையார் கலாக்ஷேத்திரா 'டிப்ளோமா' பட்டம் பெற்றவருமான செல்வி ஜீவா. நேசராசதேவியின் இசை அரங்கேற்றம் இம்மாதம் 9-ம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாண நகர சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. வடபகுதி உதவி வித்தியாதிபதியும் வட இலங்கை சங்கீதசபைத் தலைவருமான திரு. எஸ். தணிகாசலம் தலைமை தாங்குவார்.

---

## அதிகஅளவு பருப்பு இலங்கை வருகிறது

கொழும்பு, வெள்ளி

அடுத்த வாரம் இலங்கைக்கு 2,500 தொன் பருப்பு வந்து சேரவிருக்கிறது. இதுமுன் எப்போதுமில்லாதஅளவு என வர்த்தகர் ஒடுவர் தெரிவித்துள்ளார்.

# ஐயாறன் எழுதுவது

கொழும்பு தபால், தந்திச் சிப்பந்திகளின் மூன்று நாள் வேலை நிறுத்தம் முடிந்தது. நல்லவேளை. சென்ற நான்கு நாட்களாக கொழும்பு, இந்தியா முதலிய வெளித் தபால்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இன்று முதல் கிடைக்கலாம்.

இதில் யாருக்கு வெற்றி? அரசாங்கத்துக்கா, யூனியன்களுக்கா? இருவருக்குமல்ல; பொது மக்களுக்குத்தான். இந்த வேலை நிறுத்தத்துக்குப் பொதுமக்கள் சற்றும் ஆதரவோ அனுதாபமோ காட்டவில்லை. தீவெங்கும் வேலை நிறுத்தத்தைப் பரப்ப முயற்சி நடந்தது. ஆனல் பொதுமக்களின் மனதை அறிந்ததால் பிறர் இதில் சேர மறுத்துவிட்டார்களாம். அதனல் வேலை நிறுத்தத்தை உடன் முடிவுக்குக் கொண்டுவர யூனியன் தலைவர்கள் சம்மதிக்கவேண்டியதாயிற்றென்று தெரிகிறது.

அரசாங்கமும் கண்டிப்பாக இருந்ததால், வேலை நிறுத்தம் நீடிக்காமல் இத்துடன்முடிந்தது. இதுபற்றி அச்சிப்பந்திகளின் குடும்பத்தாருக்கும் மிக ஆறுதலாக இருக்கும். வேலை நிறுத்தம் இரு புறமும் கூர்மையுள்ள கத்தி என்பர். எளிய சிப்பந்திகளுக்குத்தான் அதிக கஷ்டம். இனி இவ்வித வேலை நிறுத்தங்கள், அதிலும் தபால் போன்ற அத்தியாவசிய சேவைகளில் ஏற்படாமல் தடுக்க, ஏதும் செய்ய முடியாதா? மனமுண்டானல் நிச்சயம் மார்க்கம் உண்டு.

ஃ ஃ ஃ

டில்லியிலிருந்து ஒரு ருசியான செய்தி கிடைத்துள்ளது. 801 ஆடுகளை, தங்கள் எல்லையிலிருந்து இந்திய துருப்புகள் அகற்றிவிட்டதாக சீனம் குற்றம் சாட்டி, 3 நாட்களுக்குள் அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று இந்தியாவைப் பயமுறுத்தியதல்லவா?

டில்லியிலே சில எதிர்க் கட்சியினர் 801 ஆடுகளையும் 3 மைல் தூரம் ஊர்வலமாக நடத்திக்கொண்டு, சீன ஸ்தானிகராலயத்துக்கு வந்து, அதை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டனர்.

ஆடுகளின் கழுத்திலே கறுப்புப் பட்டையில் "எங்களைச் சாப்பிடுங்கள். ஆனல் உலகைக் காப்பாற்றுங்கள்" என்று எழுதியிருந்தனர். அந்த ஆடுகள் 'மே மே' என்று கத்திக்கொண்டே செல்வதைத் தெருவில் மக்கள் கூடி வேடிக்கை பார்த்தனர். ஸ்தானிகராலயத்துக்கு நூறு கஜ தூரத்தில் ஓர் இடத்தில் அவற்றை ஓட்டிச் சென்றனர். இதற்கு ஏற்பாடு செய்தவர்களில் நால்வர் இந்த ஆடுகளையும், ஓர் விஞ்ஞாபனத்தையும் ஏற்றுக்கொள்ளுமாறு சீன அதிகாரிகளைக் கேட்டனர். அக்காரியாலயக் கதவு பூட்டப்பட்டிருந்தது. உட்பக்கமிருந்த இரு சீன அதிகாரிகள் அதை ஏற்க மறுத்தனர். விஞ்ஞாபனத்தை வாசற் கதவில் ஒட்டிவிட்டுத் திரும்பினராம்.

அதில் குறிப்பிட்டிருந்ததாவது:-

சில ஆடுகளை இந்தியா அபகரித்துச் சென்றதாகக் குற்றம் சாட்டி, அதற்காக இராணுவ நடவடிக்கை எடுப்பதாகப் பயமுறுத்துவதும், சமாதானத்தை விரும்பும் ஓர் அண்டை நாட்டின் எல்லையிலே இராணுவ முஸ்தீபுகளைச் செய்வதும் முற்கால யுத்த வெறியர் செய்யும் காரியமேயன்றி, ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை

(6-ம் பக்கம் பார்க்க)

# சீனுவில் பெருமளவு துருப்பு குவிப்பு: ஜெட் விமானங்கள் தயாராகின்றன

## நூற்றுக்கணக்கான ரயில்களில் துருப்புக்கள் நகர்வதாக தகவல்

### காண்டன் நகரிலிருந்து முதியோர், பெண்கள், குழந்தைகள் வெளியேற்றம்

ஹாங்காங், அக். 1

சீனுவில் பெருமளவு துருப்புகள் குவிக்கப்பட்டு வருவதாயும், நூற்றுக்கணக்கான ரயில்கள் சீனத்துருப்புகளுடன் தென்திசை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாயும் இங்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. சீனுவெங்குமுள்ள விமானத் தளங்களில் ஏராளமான ஜெட்விமானங்கள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

### அணுப்போர் ஆயத்தமா

தென்சீனுவில் போர் ஆயத்தங்கள் செய்யப்பட்டிருப்பதாயும். காண்டன் நகரிலிருந்து முதியோர்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் வெளியேற்றப்படுகிறுர்கள் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

ஒருவேளை அணுப்போர் ஏற்படக்கூடும் என்ற கருத்தில் மக்கள் இவ்விதம் வெளியேற்றப்படுகிறுர்களாம்.

### சிக்கிம் எல்லையில் அமைதி

அதேசமயம் சிக்கிம், திபேத் எல்லையில் நிலைமை அமைதியாக இருப்பதாயும், எல்லையிலிருந்து சீனர்கள் விலகிச் செல்வதாயும் சிக்கிம் மன்னர் கல்கத்தாவில் நிருபர்களிடம் கூறினுர். கல்கத்தாவிலிருந்து வெளியாகும் ''சைனு ரிவ்யூ'' என்ற பத்திரிகையை மேற்குவங்க அரசாங்கம் தடைசெய்திருக்கிறது இபபத்திரிகை தொடர்ந்து சீன ஆதரவுப் பிரசாரம் நடத்தி வருவதே இதற்குக் காரணம் என அறிவிக்கப்படுகிறது.

### பாகிஸ்தானுக்கு சீனு ஆதரவு

சீனுவின் 16-வது சுதந்திரதினத்தை முன்னிட்டு நேற்று பீகிங்கில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பிரதமர் சூ-என்-லாய் பேசியபோது பாகிஸ்தானுக்கு சீனுவின் பூரண ஆதரவைத் தெரிவித்தார். காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற பாகிஸ்தானின் நிலையை அவர் வன்மையாக ஆதரித்துப் பேசுகையில், இந்தியாவை ஆக்கிரமிப்பு நாடு எனக் குறிப்பிட்டார்.

### இந்தியத் தூதர் வெளியேற்றம்

சூ-என்-லாயின் இந்தப் பேச்சைத் தொடர்ந்து வைபவத்தில் பங்குபற்றிய இந்தியத்தூதர் திரு. மேத்தாவும், அவரது மனைவியும் வெளிநடப்பு செய்ததாக அறிவிக்கப்பட்டது.

வைபவத்தில் பாகிஸ்தான் வர்த்தக மந்திரி உட்பட சுமார் 5000விருந்தினர்கள் பங்குபற்றிக் கொண்டிருந்தார்கள்.

### ஆதரவு பலம் அளிக்கிறது

பாகிஸ்தான் ஜனுதிபதி அயூப்கான் அனுப்பியிருந்த செய்தியில் சீனுவின் ஆதரவு தங்களுக்குப் பெரும் பலத்தை அளித்திருப்பதாகக் கூறி அதற்கு நன்றி தெரிவித்திருந்தார். நியுயோர்க்கிலிருந்து திரு. பூட்டோ, திரு. சென்யீக்கு அனுப்பிய செய்தியிலும் சீன ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### மா ஸே துங்

சீனத்தலைவர் மாஸேதுங், ஜனுதிபதி லியூஷாசீ ஆகியோர் நேற்று பாகிஸ்தான் வர்த்தகமந்திரி தலைமையிலான தூதுகோஷ்டியை வரவேற்றுப் பேசியிருக்கிறுர்கள். இங்கே வந்திருக்கும் பாகிஸ்தான் விமானத் தூதுகோஷ்டியையும் அவர்கள் சந்தித்துப் பேசினுர்கள். பிரதமர் சூ-என்-லாய், மார்ஷல் சென்யீ ஆகியோரும் பாக். மந்திரியுடன் பேச்சு நடத்தினுர்கள்.

## பிரிட்டிஷ் தூதரகம் முன் டில்லிமாணவர்கள்ஆர்ப்பாட்டம்

### அமெரிக்க பத்திரிகைகளை கொளுத்தினர்

#### சாம் பகுதியில் அபாயமான நிலைமை

புதுடில்லி. அக். 1

இந்தோ-பாக். சச்சரவில் ஒரு தலைப்பட்சமான கொள்கையைப் பிரிட்டன் கடைப்பிடிப்பதை எதிர்த்து, டில்லியிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷன் முன்பாக பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

டில்லியிலுள்ள டைம், நியூஸ் வீக் ஆகிய அமெரிக்க பத்திரிகைகளின் காரியாலயங்களின் முன்பும் டில்லி பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இந்தியாவுக்கு விரோதமான முறையில் அவைகள் பிரசாரம் செய்துவருவதாக ஆட்சேபித்த அவர்கள், இப்பத்திரிகைப் பிரதிகளைக் காரியாலயங்களுக்கு வெளியே கொளுத்தினுர்கள். இந்திய வெளிநாட்டிலாகா காரியதரிசி திரு. ஸி. எஸ் ஜா, பிரிட்டனின் ஒரு தலைப்பட்ச கொள்கை காரணமாக அரசாங்கத்தினதும், மக்களினதும் உணர்ச்சிகளைப் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு. பிரீமனிடம் தெரிவித்தார்.

#### பிரதமர் நம்பிக்கை

தற்போதைய நெருக்கடியிலிருந்து புதிய இந்தியா ஒன்று உருவாகப்போகிறது என்பதில் சந்தேகமில்லை என்றும், முன்னைவிட வலிமையும், சக்தியும் பொருந்தியதாக அது இருக்குமென்றும் பிரதமர் சாஸ்திரி நேற்றுக் கூறினுர்.

அதே சமயம் அஸ்ஸாம்-கிழக்குப் பாகிஸ்தான் எல்லையில் புதிய படை நிலைகளை பாகிஸ்தான் அமைத்துவருவதாக அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் துருப்புக்கள் இப்பகுதியில் மேலும் மும்முரமாய் இருப்பதாயும், புதிதாக ஆள் சேர்ப்பது மூலம் துருப்புக்கள் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

சண்டை நிறுத்தத்திற்குப் பின் பாகிஸ்தானிய படைகள் ராஜஸ்தான் எல்லையில் பல இடங்களை மீறி தீவிர நிலையை உண்டாக்கியிருப்பதாய் முதல் மந்திரி திரு. அக்காடியா அறிவித்தார். 12 கிராமங்களை அவர்கள் சூறையாடி, 4 பேர்களைக் கடத்திச் சென்றதாய் மேலும் அவர் அறிவித்தார்.

மற்றும் பல பகுதிகளிலும் அவர்கள் மீறல் நடத்தியிருக்கிறுர்கள். பஞ்சாபில் ஹூஸேன் வாலாவுக்கருகில் டாங்கிகள், பீரங்கிகள் ஆகியவற்றை அவர்கள் கொண்டுவந்திருக்கிறுர்கள். ஜம்முவில் ஒரு கிராமத்தைத் தீயிட்டுவிட்டுப் பலரைக் கொன்றபின், ஊடுருவாளர்கள் பாகிஸ்தானுக்குள் ஓடிவிட்டதாய் அறிவிக்கப்பட்டது.

#### சாம் பகுதியில் அபாய நிலை

சாம் பகுதியில் சண்டைக்குப்பின் பாகிஸ்தான் பிடித்த இடத்திலிருந்து 24 மணி நேரத்தில் வெளியேறுவிட்டால் தாக்குதலை எதிர்பார்க்குமாறு இந்தியா இறுதி எச்சரிக்கை விடுத்திருப்பதாயும், இங்கு நிலைமை நெருக்கடியில் இருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

ஐ. நா. விலுள்ள பாகிஸ்தான் பிரதிநிதி திரு. அம்ஜத் அலி இதுபற்றி பாதுகாப்புச்சபைக்குப் புகார் தெரிவித்திருக்கிறுர். இந்தியா தாக்கினுல் அதனுல் ஏற்படும் எதிர் விளைவுகளை அந்த நாடுதான் ஏற்கவேண்டுமென்றும், சாம் பகுதி நிலைமை மிகவும் அபாயமாக இருக்கிறதென்றும் அவர் தொடர்ந்து கூறினுர். ஐ. நா. பார்வையாளர்களுக்கு இதுபற்றிப் புகார் செய்யப்பட்டிருப்பதாயும் திரு. அலி தெரிவித்தார்.

## டிட்டோ - ராதாகிருஷ்ணன் பிரியோனியில் சம்பாஷணை

பெல்கிரேட், அக். 1

யூகோஸ்லேவியாவுக்கு விஜயஞ்செய்திருக்கும் இந்திய ஜனுதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு அதிபர் டிட்டோவின் சார்பிலும், அவரது மனைவியின் சார்பிலும் நேற்றிரவு பெரும் விருந்துபசாரம் நடைபெற்றது.

டிட்டோவின் சார்பில் பார்லிமெண்ட் தலைவர் திரு. கார்டேல், டாக்டர் ராதாகிருஷ்ணனை வரவேற்றுப் பேசினுர். பிரதமர் உட்பட ஏராளமானேர் இவ்விருந்தில் கலந்துகொண்டனர்.

இந்திய ஜனுதிபதி நேற்று மாலை ஜனுதிபதி டிட்டோவுடன் பேச்சுநடத்துவதாயிருந்தது. ஆனுல் டிட்டோ சிறிது சுகவீனம் காரணமாகப் பிரியோனி தீவில் இருந்ததால் பேச்சுக்கள் இன்று அங்கு ஆரம்பமாகுமென அறிவிக்கப்படுகின்றது.

இரு தலைவர்களும் இந்திய-சீன தகராறு, இந்திய-பாகிஸ்தான் தகராறு உட்படப் பல விஷயங்கள் குறித்துப் பேசுவார்களென திர்பார்க்கப்படுகிறது.

இதற்கான பூர்வாங்கப் பேச்சுக்களை இரு நாட்டு அதிகாரிகளும் பெல்கிரேடில் ஆரம்பித்தனர்.

இரு மாதங்களுக்கு முன் இந்தியப் பிரதமர் சாஸ்திரி சென்றிருந்தபோது வியட்னும் பிரச்னைதான் பேச்சுக்களில் முக்கிய இடம்பெற்றிருந்ததென்றும், இம்முறை சீனு, பாகிஸ்தான் பிரச்னைகள் முதலிடம்வகிக்குமென்றும் கருதப்படுகிறது.

இந்தியத் துணைக்கண்டம் நெருக்கடிக்கு ஆளாகியிருக்கும் இத்தருணத்தில் யூகோஸ்லேவியாவின் ஆதரவு ஏற்கனவே தெளிவாக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இந்தோ-பாகிஸ்தான் தகராறை வெளியிலிருந்து தூண்டிவிடுபவர்களையும்மத பூசல்களைக் கிளப்பிவிடுபவர்களையும் முன்பே ஜனுதிபதி டிட்டோ கண்டித்திருக்கிறுரென்றும் இந்தோனேஷியா ஈரான் துருக்கி ஆகிய நாடுகளின் போக்குபற்றி வருத்தம் தெரிவித்திருக்கிறுரென்றும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டது.

## ரஷ்ய ஆயுதங்களை கொடாதே!

மாஸ்கோ, அக்.1

ரஷ்யா சப்ளை செய்யும் ராணுவ சாதனங்களை, பாகிஸ்தானுக்குக் கொடுக்கக் கூடாதுஎன சோவியத் யூனியன் இந்தோனேஷியாவிடம் கூறியிருக்கிறது. இந்தோனேஷியா இதற்கு உடன் படுவதாக ரஷ்யாவிடம் உறுதியளித்திருப்பதாய்த் தெரிகிறது.

பாரத— பாகிஸ்தான் சண்டையில் தலையிடாமலிருக்கும் படியும் இந்தோனேஷியாவை ரஷ்யாகேட்டிருக்கிறது.

## காமன்வெல்த்தில் நீடிக்க பட்டீல் விருப்பம்

பம்பாய், அக். 1

காமன்வெல்த்தில் இந்தியா நீடிக்கவேண்டுமென ரயில்வே மந்திரி பட்டீல் கூறினுர்.

''காமன்வெல்த்தற்போது ஆசிய - ஆபிரிக்க நாடுகளை அதிகம் கொண்டதாக உள்ளது. நமது இஷ்டப்படி எப்படி வேண்டுமானுலும் காமன்வெல்த்தை மாற்றி அமைக்க முடியும்'' என்றும் அவர் கூறினுர்.

இந்தியா - பாகிஸ்தான் சம்பந்தமாக தனது கொள்கையை பிரிட்டன் மறுபரிசீலனை செய்யும் என நம்புவதாகவும் அவர் கூறினுர். எனினும் காமன்வெல்த்தில் இந்தியா இருக்க வேண்டுமா அல்லது வெளியேறவேண்டுமா என்ற பிரச்னையை ராஷ்டிரபதியிடமும், பிரதம மந்திரியிடமும் விட்டுவிடவேண்டும் என பட்டீல் தெரிவித்தார்.

காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என சில நாடுகள் கோருவதை அவர் குறிப்பிட்டு, இந்த நாடுகள் பிரச்னைகளைப் புரிந்து கொள்ளவில்லை என்றும், இதை சாதாரண பிரச்னையாக்க முயற்சிக்கிறுர்கள் என்றும், காஷ்மீரில் ஏற்படும் விளைவுகள் இந்தியா பூராவையும் பாதிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

## அயூப் அனுதாபம்

ராவல்பிண்டி, அக். 1

பிலிப்பைன்ஸில் எரிமலை வெடிப்பினுல் மாண்டவர்கள் குறித்து அந்நாட்டு ஜனுதிபதி மகபகாலுக்கு, பாகிஸ்தான் ஜனுதிபதி அயூப் அனுதாபச்செய்தி ஒன்றை அனுப்பியிருக்கிறுர்.

## அங்கீகாரம்

லண்டன், அக். 1

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டத்தை தொழிற்கட்சி மகாநாடு அங்கீகரித்திருக்கிறது.

# "நாட்டின் முன்னேற்றத்துக்கு வாலிபர்களே பொறுப்பு"

## கல்லூரி மாணவர்கள் மத்தியில் செக். தூதரக அதிகாரி பேச்சு

குரும்பசிட்டி, வெள்ளி

"ஒரு நாட்டின் எதிர்காலம் வாலிபர்களின் கையிலேயே தங்கியுள்ளது. எனவே வாலிபர்கள் கல்விஅறிவு பெறுவதுடன் அமையாது சகல வழிகளிலும் சமுதாயத்துடன் சேர்ந்து ஆக்கபூர்வமான வழிகளில் ஈடுபடவேண்டும். கல்வி கற்குங்காலத்தில் மாணவர்கள் ஆசிரியருக்கு கீழ்ப்படிந்து நடத்தல்வேண்டும். விஞ்ஞான - தர்க்கரீதியான கல்வியறிவைப்பெற்று நாட்டின் பொருளாதாரஅபிவிருத்திக்கு உறுதுணையாக இருத்தல்வேண்டும்" என்று செக்கோஸ்லவாக்கிய தூதுவராலய வர்த்தகப்பிரதிநிதி திரு. லெவர் வூ சோ சுன்னுகம்ஸ்கந்தவரோதயக் கல்லூரி உயர்வகுப்பு மாணவர்மன்ற விசேஷ கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார். இவருடன் மற்றெரு பிரதிநிதியான திரு. வலன்ராவும் அங்கு பிரசன்னமாக இருந்தார். கல்லூரி அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் விருந்தினர்களை வரவேற்றுப் பேசினர்.

திரு. லெவர் வூ சோ மேலும்குறிப்பிட்டதாவது: "செக். நாடுகனிப்பொருள் வளத்தை அதிகம் கொண்டதல்ல. நிலக்கரி தவிர மற்றைய மூலப்பொருட்கள் எல்லாவற்றையும் வெளித்தேசங்களில் இருந்தே இறக்குமதிசெய்கின்றது. அவற்றைக்கொண்டு கைத்தொழில்களை வளம்படுத்தி உற்பத்திப்பொருட்களை வெளிநாட்டு சந்தைகளில் விற்பனவுசெய்கின்றேம். நமதுநாடு வர்த்தகத் துறையில் சிறப்பிடம் வகித்தபோதும் கடற்துறைமுகம் இன்றி நாலாபுறமும் தரையால் சூழப்பட்டுள்ளது. இவ்வாறு இருந்தபோதிலும் பொருளாதார வளர்ச்சிக்கு வாலிபர்களின் கடின உழைப்பே காரணமாகும்.'?

சங்கானையில் நடைபெற்ற திரைப்படவிழாவில் திரு. லெவர் வூ சோ, திரு.வலன்ராவும் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். இலங்கை செக்கோசிலேவோகிய நட்புறவுசங்க ஆதரவில் நிகழ்ந்த இத்திரைபடவிழாவில் சர்வதேசப் பரிசுபெற்ற சிறுவர் திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன. திரைப்படவிழாவினை ஆரம்பித்து வைத்து திரு. வலன்ரா பேசுகையில் "சிறுவர்களுக்கான இத் திரைப்படங்கள் பொழுதுபோக்கு சாதனங்களாக திகழ்வதுடன் இளம் சிறுர்களை நல்வழிப்படுத்தவும் உதவுகின்றது சிறுபிராயத்திலேயே நாட்டுப்பற்றுதலை மனத்தில் பதியவைப்பதுடன் வருங்காலத்தில் தேசவளத்திற்காக உழைக்கவும் செய்கின்றது" என்றுர்.

## போரில் எதிரிகள், அதன்பின் தோழர்கள்!

டோக்லி (லாகூர்) அக் 1

இச்சோகில் கால்வாய்ப் பகுதியில் இந்திய படைத்தலைவரும், பாகிஸ்தானிய படைத்தலைவரும் ரொம்ப சுமுகமாகப் பழகினர்கள். அங்கு ஐ. நா. மேற்பார்வையாளர் இல்லை.

போர்நிறுத்தம் ஏற்பட்டபின் இருவரும் அடிக்கடி சந்தித்து சண்டையைப் பற்றிப் பேசிக்கொள்வதுண்டு,

"ஐ. நா. பார்வையாளர் இன்னும்வரவில்லை. எனவே பரஸ்பரம் ஏற்றுக்கொண்டு நாங்களே சில சில்லறை ஏற்பாடுகளைச் செய்து கொண்டோம்" என்றுர். இந்திய படைத்தலைவர் இந்தியரின் அகழிகளுக்கும் பாகிஸ்தானி அகழிகளுக்கு மிடையேயுள்ள தூரம் 15 யார்தான். இருவரும் ஒருவருக்கொருவர் ஏதாவது தகவல் தெரிவித்துக் கொள்ள விரும்பினுல் சத்தம்போட்டுத் தெரிவிக்கிறுர்கள். இந்த ஏற்பாடு இதுவரை நன்கு நடந்து வருகிறது.

## சொற்பொழிவு

சுழிபுரம், வெள்ளி

வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் பஜனைச் சபையினரால் நடாத்தப்படும் கூட்டுப் பிரார்த்தனையையடுத்து நேற்றிரவு 7மணிக்குதிரு.த. துரைசிங்கம் "காந்தி அண்ணல்" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினுர்.

## விற்பனவுக்காட்சி

மட்டக்களப்பு, வெள்ளி

கோட்டைமுனை மெதடிஸ்த ஆலய சபையினரால் பொருள் விற்பனவுக் காட்சியொன்று மட்டக்களப்பு அரசடிப்பாடசாலையில்நடைபெற்றது. இவ் விற்பனவுக் காட்சியை திருமதி டபிள்யு. கேயிக் திறந்து வைத்தார் தையல்பொருள், மரக்கறி வகைகள், விளையாட்டுப் பொருள்கள் முதலியன காட்சியில் இடம் பெற்றன.

## ஐ. தே. க. மகாநாடு

குருணுகல், வெள்ளி

தேர்தலின் பின் முதல் முறையாக ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் குருணுகல் நகரசபை பண்டபத்தில் அதன் மகாநாட்டை நடத்தவிருக்கின்றது. எல்லாப் பகுதிகளிலிருந்தும் 5000 பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் பங்கு பற்றுவார்கள்.


இறைவன் திருமேனியில்

சந்தனக் காப்பிட்டு

அலங்கரிக்க மிகவும் உகந்த

பச்சை சந்தனம்

உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறேம்.
என்றும் எங்களிடம் கிடைக்கும்.

சுந்தரம் பிறதர்ஸ்

கோவில் அபிஷேகப்பொருட்கள்
மருந்துச்சரக்கு விற்பனையாளர்

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


## கதாப்பிரசங்கங்கள்

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய ஏழாம்திருவிழாவான இன்று மாலை "வெண்ணையுண்ட கண்ணன்" என்னும் பொருள்பற்றி பண்டிதவித்துவான் எம். வி. பாலசுந்தரம், உரை நிகழ்த்துவார். வெண்ணெய்திருடிய கண்ணனுக பெருமான் கண்ணுடிச் சப்பரத்தில் இரவு வீதிவலம் வருவார்.

ஃ ஃ ஃ

வண்ணை சிவன்கோயில் நவராத்திரி விழாவில் மாலை 5 மணி முதல் ஸ்ரீமத் ஸி. எஸ். எஸ். மணிபாகவதர் மஹாபாரத விரிவுரைத் தொடரில்"கண்ணன்தூது" கதாப்பிரசங்கமும், இரவு 7 மணி முதல் கோப்பாய் மகளிர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் "கலைவாணியும் கவிவாணரும்" என்ற கதாப்பிரசங்கமும் நிகழ்த்துவார்

ஃ ஃ ஃ

**கந்தகோட்டத்தில்**

நல்லூர்க் கந்தகோட்டத்தில் இரவு 8 மணிக்கு தேவநாம சங்கீர்த்தனமும் விசேஷநவராத்திரிபூஜையும் நடைபெறும்.

## நவராத்திரிவிழா

யாழ்ப்பாணம், சனி

கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சைவ வித்தியாலயத்தில்நவராத்திரிவிழா சென்ற வாரம் ஆரம்பமாகியுள்ளது. தினமும் விசேட பூசையும் மாணவர் ஆசிரியர் விரிவுரைகளும் இடம்பெறுகின்றன. விஜயதசமியன்று விசேஷ ஆராதனைகளையும் மாணவர்களினது இசைக் கச்சேரியும் நடைபெறும்.

## சலவைத்தொழிலாளர் சங்க மகாநாடு

மட்டுவில், வெள்ளி

வடஇலங்கைச் சலவைத் தொழிலாளர் சங்க இரண்டாவது ஆண்டு மகாநாடு மட்டுவில் தெற்கு கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி கிராம சபைத்தலைவர் திரு. அ. சுப்பிரமணியம் தலைமையில் ஆரம்பமான இம்மகாநாட்டில் சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினம், கோப்பாய் எம். பி. திரு.சி. கதிரவேலுப்பிள்ளை, வரணி மகாவித்தியாலய ஆசிரியர் திரு எம். என். நடராசா ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர்.

சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை மேல்சபை உறுப்பினராகத் தெரிவு செய்ய வேண்டுமெனக் கோரும் தீர்மானம் ஒன்று மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

சாவகச்சேரி எம். பி. சுகவீனம் காரணமாக அதிகம் பேச முடியாதமைக்கு வருத்தம் தெரிவித்து சலவைத் தொழிலாளர் சங்கத்திற்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

திரு. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் சங்கம் ஒற்றுமையுடன் முன்னேற வேண்டிய அவசியம்பற்றி வற்புறுத்தியதுடன் தொழிலாளர்கள் பழைய முறையை விடுத்து நவீன முறைகளை நாடினுல் பொருளாதார வளத்தில் உயர்வடைய வாய்ப்புண்டு என்றுர்.

திரு. நடராசா பேசுகையில், சாதி வேற்றுமை ஒழிப்புப் பிரச்சாரம் பரவலாக நடைபெற்றுலும்சாதிகளுக்குள்ளேயுள்ள சிறுசிறு சாதிப் பிரிவுகள் ஒழிக்கப்பட்டு ஒற்றுமை ஏற்படவேண்டியது அவசியமும் கட்டாயமுமாகும் என்றுர்.

திரு. இரத்தினசபாபதியின் நன்றியுரையை தொடர்ந்து இன்னிசைக்கச்சேரியுடன் மகாநாடு முடிவடைந்தது.

## "உலகத் தமிழர் மகாநாட்டில் விவேகானந்தசபை கலந்துகொள்ளும்"

பம்பலப்பிட்டி. வெள்ளி

கொழும்பு விவேகானந்த சபையின் நிர்வாக கவுன்சில் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றபோது பின்வரும் விஷயங்கள்பற்றி ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

மலாயாவில் அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில்நடைபெறவிருக்கும் தமிழ் மகாநாட்டில் பின்வருவோர் சபையின் பிரதிநிதிகளாகக் கலந்துகொள்வர். சபைத்தலைவர் திரு. எம். வைரவப்பிள்ளை, கிளிநொச்சி எம், பி, திரு. கா. பொ. இரத்தினம், திருவாளர்கள்: ஆர். சபாநாயகம், கே. லக்ஷ்மணன்: வி. சங்கரலிங்கம், வி. ஆர். வடிவேற்தாசன்.

அடுத்தவருடம் ஜனவரி மாதத்தில் இந்தியாவில் நடைபெறவிருக்கும் உலக இந்து மகாநாட்டில் சபையின் பிரதிநிதிகள் கலந்து கொள்வது.

திருக்கேதீஸ்வரம் ஆலய புனருத்தாரண திருப்பணிச் சபைக்கு உதவி புரியுமாறு மக்களையும் அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்வது.

மெய்கண்டார் குருபூசையும் மற்ற சந்தனுச்சாரியர்களின் குருபூசையும் இம்மாதம் 25-ம் திகதி வெள்ளவத்தையில் நடத்துவது.

இம்மாதம் 9-ம் 10-ம் திகதிகளில் நடனவிழா ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்வதுபற்றியும் கவுன்சில் ஆராய்ந்து இதற்கென ஒரு உப கமிட்டி நியமிக்கப்பட்டது.

கூட்டத்தில் சேர் கந்தையா வைத்தியநாதன். திரு. கே. வைரமுத்து, திரு. எஸ். ராசேந்திரம் ஆகியோரின் பிரிவுகுறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

## சுவர்ண்சிங்—ஸ்ரீமதி பண்டிட்

நியூயோர்க், அக். 1

இந்திய வெளிவிவகார மந்திரி சுவர்ண்சிங் நேற்று ரஷ்ய வெளிவிவகார மந்திரி திரு. குரோமிகோவுடன் ஒன்றரை மணிநேரம் சம்பாஷணை நடத்தினர். பாரத-பாகிஸ்தான் சண்டையில் ரஷ்யப் பிரதமர் மேற்கொண்ட சமரச முயற்சி பற்றி இருவரும் விவாதித்ததாகத் தெரிகிறது. திரு. சுவர்ண்சிங் பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்திவருவதாய் அறிவிக்கப்பட்டது.

பாரிஸில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் அதிபர் டிகாலை இன்று சந்தித்துப் பேசினுர்.

## ஏமன் குற்றச்சாட்டு

ஏமன், அக். 1

பிரிட்டிஷ் பீரங்கிகளும், விமானப்படை விமானங்களும் ஈவிரக்கமற்ற தாக்குதல்நடத்தி தங்கள் பெண்களையும், குழந்தைகளையும் கொன்றிருப்பதாக ஏமன் குற்றஞ்சாட்டியிருக்கிறது.


REGAL--JAFFNA
NOW SHOWING!
Laurence Harvey, Kim Novak
OF HUMAN BONDAGE
(W.Somerset Maugham's Novel)
(Adults only)

இலங்கையில் முதன்முதலாக
யாழ். வின்ஸர் திரையில்
இப்பொழுது
திரையிடப்படுகிறது!
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்,
சரோஜாதேவி,
சௌகார் ஜானகி
மற்றும் பலர் நடித்த
புதிய பறவை

5-வது ஜனத்திரள் வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2 காட்சிகள்;
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ்.எஸ். ராஜேந்திரன், கே. ஆர். விஜயா
நடிக்கும்



கைகொடுத்த தெய்வம்

## பிரிவிடுதல் நோத்தீஸ்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்

நுணுவில் மேற்கு, தற்காலம் பிரதம கணக்காளர் கந்தோர், இலங்கைப் புகையிரத ஸ்தாபனம் மருதானை தம்பிராசா சுந்தரராசா வழக்காளி

இல. 2090/பி

எதிராக

1. மட்டுவில் தெற்கு, தற்காலம் பொற்றனிக்கல் காடின் பேராதனை B.N. எமேசன் மனைவி அரியமலர்.
2. நுணுவில் மேற்கு தற்காலம் குருஸ்தானம் காரைநகர் G. M. கனகரத்தினம்.
3. நுணுவில் மேற்கு தம்பு அருட்பிரகாசம்.
4. மனைவி மனோரஞ்சிதமலர்.
5. நுணுவில் மேற்கு தம்பிராசா சிங்கராசா.
6. நுணுவில் மேற்கு தற்காலம் பொலிஸ் ஸ்ரேசன்பம்பலப்பிட்டி தம்பிராசா துரைராசா.
7. நுணுவில் மேற்கு தம்பிராசா இரத்தினராசா.
8. நுணுவில் மேற்கு தற்காலம் 17/2 ஸ்ரேசன் ரோட்டு வெள்ளவத்தை தம்பிராசா அரியகுணராசா.
9. நுணுவில் மேற்கு N. A. தம்பிராசா மகள் கனகமணி இவ பராயமற்றவவானபடியால் இவவின் தாயாரும் பராமரிப்புக்காரி 10-ம் எதிரிமூலம்,
10, நுணுவில் மேற்கு N. A. தம்பிராசா கைம்பெண் இராசம்மா.
11. நுணுவில் மேற்கு C. சின்னப்பாபிள்ளை கைம்பெண் இராசம்மா.
12. நுணுவில் மேற்கு C. சின்னப்பாபிள்ளைபெண் செல்வ ரஞ்சிதராணி.
13. நுணுவில் மேற்கு C. சின்னப்பாபிள்ளை.
14. மட்டுவில் தெற்கு தற்காலம் பொற்றனிக்கல் காடின் பேராதனை B.N. எமேசன்.

எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரியிறை நில. பர. ஐந்து (5) கொண்டதும், கிழக்கு தம்பையா முத்தையாவுக்கும் N. A. தம்பிராசாவின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய வாதனங்கள். வடக்கு யாழ்ப்பாணம் கண்டிரோட், மேற்கு ஒழுங்கை, தெற்கு செல்லையா சின்னப்பாபிள்ளை பெண் செல்வரஞ்சித ராணிக்குரிய வாதனம் எனத் திக்குகள் பூண்டதும் இவ் வழக்கில் அணைக்கப்பட்டிருக்கும் அதிகாரம்பெற்ற உலாந்தா A. கோவிந்தபிள்ளையால் வரையப்பட்ட 1963-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23-ந் திகதிகொண்ட 194-ம் இலக்கப்படத்தில் 1-ம், 2-ம், 3-ம் துண்டுகளாகச் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதுமான மொட்டைப் புளியடி வளவு அல்லது புளியடிவளவு என்னும் ஆதனத்தையும் அதற்குள்ளிருக்கும் கட்டிடத்தையும் அதைச்சேர்ந்தவைகளனைத்தையும் 1951-ம்ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கப்பட் டிருக்கிறது. மேற்படி ஆதனத்தில் உரிமை கோருபவர்கள் 1965-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22-ந் திகதி காலை 9 மணிக்கு மேற்படி கோட்டில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

கோட்டாரின் கட்டளைப்படி 1965ஞுபுரட்டாதிமீ 28 உ

செ. சடாச்சரம்
சக்கிடுத்தாருக்காக
889

## காங்கேசன்துறை பட்டினசங்கம்
## கேள்வி விண்ணப்ப விளம்பரம்

இப்பட்டின சங்க எல்லைக்குள் சூறுவளியால் மின்சார விநியோகத்திற்குரிய கம்பிகள், விளக்குகள் முதலியனவற்றிற்கு ஏற்பட்ட பழுதுகளைத் திருத்தம் செய்வதற்குகேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் பத்திரங்கள் 11—10—65நண்பகல்வரை திரும்பப்பெறும் வைப்புப் பணமாக ரூ. 25/- கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 15-10-65 நண்பகல்வரை ஏற்றுக்கொள்ளப்படும். மற்றும்விபரங்களுக்கும் விண்ணப்பப் பத்திரங்களுக்கும் கீழ்க் காணும்விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

தலைவர்
காங்கேசன்துறை, பட்டின சங்கம்

பட்டினசங்கக்காரியாலயம்,
காங்கேசன்துறை,
30-9-65. 894




## கொழும்பு

### சனி 2 - 10 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற் சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-00 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 படப் பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செய்திச்சுருள், 7-00 இசைக்கச்சேரி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 உரைச்சித்திரம், 10-00 நேயர்விருப்பம்.

### ஞாயிறு 3 - 10 - 65

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற் சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 நிலையஒலிப் பதிவுகள், 7-45 தமிழோடிசைப்பாடல், 8-00 பொளத்தவாசம்.

344 மீற்றர் & 49 மீற்றர்

8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம்பாடசாலை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 குதூகலம்.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரைஇசை.

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 தாளவாத்தியக் கச்சேரி, 6-45 நேயர்கடிதங்கள், 7-00 பாட்டு, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மனைவிளக்கு — மாதர்நிகழ்ச்சி, 9-45 மாதர் கேட்டவை, 10-15 தேர்ந்தஇசை.

## அமெரிக்க விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது

வாஷிங்டன், அக். 1

வடவியட்னும்மீது அமெரிக்க விமானம் ஒன்று ரஷ்ய ஏவுகருவியினல் சுட்டுவீழ்த்தப்பட்டதாக பாதுகாப்பு மந்திரி மக்னமாரா தெரிவித்தார். இதுவரை மொத்தம் 4 அமெரிக்க விமானங்கள் ஏவுகருவி மூலம் வீழ்த்தப்பட்டது என அவர் கூறினுர். ஆனல் நேற்றுமட்டும் 4 அமெரிக்க விமானங்கள் ஏவுகருவிகள் மூலம் வீழ்த்தப்பட்டன என்று வடவியட்னும் கூறியிருக்கிறது.

## தேசீய சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 178 பெறும் 100 பரிசுகள் வருமாறு:

| | |
|---|---|
| 09 T 0587 | 03 G 0087 |
| 15 Y 0124 | 12 L 0297 |
| 14 T 0549 | 16 J 0868 |
| 12 H 0278 | 04 U 0479 |
| 10 B 0028 | 03 X 0692 |
| 12 C 0228 | 06 [illegible] 0478 |
| 06 E 0701 | 13 Z 0374 |
| 08 S 0992 | 16 R 0743 |
| 16 O 0165 | 06 L 0991 |
| 16 O 0366 | 03 X 0778 |
| 06 H 0930 | 10 U 0486 |
| 12 C 0038 | 14 E 0519 |
| 04 G 0064 | 06 G 0306 |
| 09 X 0085 | 12 X 0612 |
| 06 Z 0161 | 07 B 0367 |
| 08 V 0703 | 13 Y 0324 |
| 01 Q 0547 | 16 T 0248 |
| 06 A 0291 | 12 S 0627 |
| 12 J 0819 | 13 U 0853 |
| 08 V 0442 | 02 P 0022 |
| 05 W 0786 | 13 A 0778 |
| 12 X 0331 | 11 O 0882 |
| 15 K 0188 | 06 B 0834 |
| 14 D 0035 | 15 J 0247 |
| 13 Z 0434 | 06 D 0976 |
| 11 G 0308 | 14 N 0039 |
| 08 M 0750 | 08 S 0292 |
| 08 K 0390 | 08 L 0497 |
| 02 Q 0206 | 07 S 0894 |
| 10 G 0965 | 15 M 0060 |
| 08 G 0827 | 10 D 0888 |
| 09 F 0507 | 03 O 0681 |
| 09 N 0957 | 01 G 0694 |
| 02 S 0319 | 14 Y 0927 |
| 04 J 0752 | 03 A 0610 |
| 16 Y 0481 | 06 L 0532 |
| 14 N 0052 | 14 Z 0354 |
| 15 M 0924 | 03 [illegible] 0074 |
| 10 B 0395 | 04 U 0391 |
| 01 K 0030 | 14 Z 0020 |
| 02 G 0113 | 07 V 0437 |
| 02 B 0357 | 08 Y 0735 |
| 08 S 0127 | 11 O 0487 |
| 11 F 0054 | 15 H 0248 |
| 06 C 0467 | 10 F 0057 |
| 12 S 0437 | 15 T 0451 |
| 09 M 0051 | 02 Z 0247 |
| 08 H 0104 | 11 V 0788 |
| 09 A 0832 | 07 G 0113 |
| 02 D 0316 | 07 C 0340 |

## வரி விளம்பரம்

### தேவை

எமது தயாரிப்புகளை வீட்டுக்கு வீடு விற்பனை செய்வதற்கு பெண்கள் தேவை. அனுபவமற்றவர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். விண்ணப்பிக்கவும்: மனேஜர், இலங்கா லபோற்றறீஸ், 46, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 1096

புதிதாய் திறக்கப்படும் கிறீன்பலெஸ் கோட்டலுக்கு சமையல்காரர், ரிமாறுவோர் தேவை. புதன் கிழமைக்கு முன் நேரில் வரவும். வ. ச. சுப்பிரமணியம், 66, கண்டி ரோட், வவனியா. 1097

கெஷியராக (Cashier) கடமை புரிவதற்கு நேர்மையும் நம்பிக்கையுமுள்ளவர் உடனே தேவை. ஆரம்பசம்பளம் ரூபா 100/- கொடுக்கப்படும். டிப்போசிட் பணம் 1000/. ரொக்கம் கட்டவேண்டும். 2-ம் திகதி சனிக்கிழமை காலையும் 4-ம் திகதி திங்கட்கிழமையும் டிப்போசிட் பணத்துடன் சமுகம் கொடுக்கவும். தகுதியானவருக்கு உடன் நியமனம் வளங்கப்படும். உரிமையாளர் தமிழ் நேசன் அலுவலகம்-சாலி கோப்பறேஷன், யாழ்ப்பாணம். 1100

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரிக்கு அருகாமையில் பதினைந்து பரப்புக் காணியும் புதிய வீடும் விற்பனைக்குண்டு. வல்லிபுரம் சோமசுந்தரம், கந்தரோடை. 1098

### கல்வி

தட்டெழுத்து, சுருக்கெழுத்து தமிழில், ஆங்கிலத்தில், சிங்களத்தில். ஜி. சி. இ. கலை விஞ்ஞானம் வர்த்தகம், Applied Advanced Mathematics) ஆங்கிலம் கணக்குப் பதவியல் காலை மாலை வகுப்புகள். யாழ். கல்லூரி, 426, ஆஸ்பத்திரி ரோட். பெண்கள் கிளை - 29, பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம். 1099

First in Law, L.L B, B.Com., M. A. Q.; 4-10-65 திங்கள் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். G.C.E.(O/L & A/C-Arts & Science-prep & Special Rapid Revision December 1965 Examination) G.A.Q, G.S.Q, B.A B.Sc (General & Special) வகுப்புகள் ல்லாப் பாடங்களிலும் ஒழுங்காக நடைபெறுகின்றன. தொடர்ந்து கற்க விரும்புவோர் முத்திரையொட்டிய உறையுடன் எழுதுக. கௌரவ பதிவாளர், வடபிரதேசப் பல்கலைக் கல்விக் கழகம், நமசிவாயவித்தியாலயம், யாழ்ப்பாணம். 1101

## மந்திரியின் மன்னர் விஜயம்

மன்னர், வெள்ளி

மன்னர்ப் பகுதிக்கு இம்மாதம் 9-ந் திகதி சனிக்கிழமை வீடமைப்பு, தொழில் அமைச்சர் ஜனப் எம். எச். முகமது உத்தியோகபூர்வமாக வரவிருக்கின்றர். மன்னரில் மூன்று நாட்கள் தங்கியிருக்கும் அமைச்சர் மன்னர்ப்பகுதியிலுள்ள பல்வேறு இடங்களுக்கும் செல்வாரெனத் தெரியவருகிறது.

## "எதிர்பார்த்ததைவிட சிறப்பாக சண்டையிட்டனர்"
### இந்திய வீரர்கள் குறித்து "வாஷிங்டன் போஸ்ட்"

வாஷிங்டன், அக். 1

உலகத் தலைநகரங்களிலும் அமெரிக்க அயல் நாட்டு இலாகாவிலும், பாதுகாப்பு இலாகாவிலும் விரிவான ஆராய்ச்சிகள் நடத்தியபின் ''வாஷிங்டன் போஸ்ட்'' பத்திரிகை கூறியிருப்பதாவது:

போர்நிறுத்த எல்லைக்கப்பால் ஊடுருவல்காரர்களை அனுப்புதன்மூலம் காஷ்மீரில் கலகம் மூட்டிவிடுவதில் தோற்றது பாகிஸ்தானின் முதல் ஏமாற்றம். ராணுவ நடவடிக்கைமூலம் இந்தியாவின் மூக்கை உடைத்து காஷ்மீர் பிரச்னையைக் கிளப்ப பாகிஸ்தான் இன்னமும் நம்பியது. பாகிஸ்தானிடம் சிறிய ஆனல் நன்கு பயிற்சிபெற்ற அமெரிக்க சாதனங்கள் கொண்ட ராணுவம் இருக்கிறது. ஆனல் பாகிஸ்தானே அல்லது அமெரிக்காவோ எதிர்பார்த்ததைவிட அதிக உறுதியுடனும், சிறந்தவகையிலும் இந்தியர்கள்போரிட்டனர்.

நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் சர்வஜன வாக்கெடுப்புப் பற்றி அயல்நாட்டு மந்திரி ரஸ்க் பேசி, ராஜதந்திரத் துறையில் அதிர்ச்சி ஏற்படுத்தியதாயும் ஆனல் விரைவில் அதற்காக அவர் வருந்தியதாயும் 'போஸ்ட்' மேலும் கூறியது.

இந்திய- பாகிஸ்தான் சண்டையின்போது பீகிங் தலையிடாதிருக்க பி 52 விமானங்கள், அல்லது வேட்டை வெடிகுண்டுவிமானங்கள் சீனவின் கேந்திர திபேத்திய சப்ளை ரஸ்தாவை தாக்குவது உட்பட பல போர்த் திட்டங்களை அமெரிக்கா பரிசிலித்தது என்றும் அது கூறியது.

## தீர்த்தக்கரை பூங்காவனமாகும்

பருத்தித்துறை, வெள்ளி

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்த உற்சவ தினத்தன்று தீர்த்தக் கரையை பூங்காவனம் போல் அலங்கரிப்பதெனவும் அடியார்கட்கு தாகசாந்திக்கேற்ற வசதிகளை வழமைபோல் மேற்கொள்வதெனவும்கற்கோவளம்வாலிபர்கள் திர்மானித்துள்ளனர்.

இதைவிட அன்று மாலை கடற்கரை மைதானத்தில் இன்னிசை விருந்தளிப்பதற்கான ஒழுங்குகளும் செய்யப் பட்டுவருவதாக அறியப் படுகிறது.

## கலைமகள் விழா

யாழ்ப்பாணம், சனி

கந்தர்மடம் இந்துமகளிர் ஒழுங்கையில் இருக்கும் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் நாளைஞாயிற்றுக்கிழமை மாலை இந்து இளைஞர்களால் சரஸ்வதி பூஜை கொண்டாடப்பட இருக்கிறது.

ஃ ஃ ஃ

உடுப்பிட்டி, வெள்ளி

திருநெல்வேலி வர்த்தக கலைமன்றத்தினரால் இன்று சனிக்கிழமை சரஸ்வதி பூஜை கொண்டாடப்படவிருக்கிறது. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கத்தின் சமயச் சொற்பொழிவும் இன்னும் பல சொற்பொழிவுகளும் நடைபெறவிருக்கின்றன.

ஃ ஃ ஃ

கொக்குவில் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களால் திங்கட்கிழமை காலை 8-30 தொடக்கம் நண்பகல் 12 மணிவரைசரஸ்வதிபூஜைகொண்டாடப்படவிருக்கிறது.

ஃ ஃ ஃ

நவாலி மகாவித்தியாலயத்தில் திங்கட்கிழமை காலை கலைமகள்விழா கொண்டாடப்படவிருக்கிறது. செல்வி ஞானகுமாரி தங்கராசா இசைவிருந்தளிப்பார்.

# ஏற்பினால் மரணமான மற்றொரு குழந்தை

யாழ்ப்பாணம், வெள்ளி

பெயரிடப்படாத ஆறு நாள் குழந்தையின் பொக்குள் கொடியை வீட்டில் பாவிக்கும் சாதாரண கத்தியால் வெட்டியதன் காரணமாக ஏற்புண்டாகி மரணமான சம்பவம் ஒன்று சங்கானையில் நிகழ்ந்துள்ளது.

சங்கானையை சேர்ந்த இராமலிங்கம் சோதிலிங்கம் என்பவரின் பெயரிடப்படாத ஆறுநாள் குழந்தையின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினார்.

காலஞ்சென்ற குழந்தை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும், குழந்தையின் படுக்கை டிக்கட்டில், மருத்துவ தாதி வீட்டில் பாவிக்கும் சாதாரண கத்தியால் பொக்குள் கொடியை வெட்டியதால் ஏற்புண்டாகியதென்று டாக்டர் குறிப்பிட்டிருந்ததன் காரணமாக மருத்துவ தாதியை ஆஜர் செய்யும்படி மரணவிசாரணை அதிகாரி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சாட்சியமளித்த குழந்தையின் தகப்பன், தன் மாமியாராகிய செல்லமுத்துதான் பிள்ளையின் பொக்குள் கொடியை சத்தகத்தால் வெட்டியதாக தெரிவித்தார்.

டாக்டர் செல்லத்துரை சாட்சியமளிக்கையில், பொக்குள் கொடியை சாதாரண கத்தியால் வெட்டியதால் ஏற்புண்டாகி மரணமேற்பட்டதென கூறினார்.

விபரீதமாக ஏற்பட்ட மரணமென தீர்ப்பளித்த மரணவிசாரணை அதிகாரி இதுபற்றி மேலும் விசாரணை செய்து, மருத்துவதாதி, பொக்குள் கொடியை வெட்டியிருந்தால் நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## தமிழ்படிவங்கள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் தொழில் அலுவலகத்தில் சிங்களப் படிவம் பெரும்பாலும் கொடுபட்டு வந்தது சம்பந்தமாக, தொழில் வீடமைப்பு மந்திரி திரு. முகமதிற்கு, கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தந்திமூலம் ஆட்சேபம் தெரிவித்திருந்தார்.

தமிழ் படிவங்கள் உடனே வழங்க உத்தரவிட்டிருப்பதாக, தொழில் மந்திரி நேற்று கிளிநொச்சி எம். பி. க்கு அறிவித்துள்ளார்.

## சிறிமா தேர்தல் வழக்கு தள்ளுபடி

கொழும்பு, வியா'

வல்பொலவைச் சேர்ந்த திரு. சேகர பெரேராவும். அளவையைச் சேர்ந்த திரு. ஆர். ஏ. ஜெயசேகராவும் திருமதி பண்டாரநாயகா ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு அத்தனகலைப் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல்செய்த வழக்கை நீதியரசர் ஏ. எல். சிறிமான செலவுடன் தள்ளுபடி செய்தார்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யையும், சுதந்தரத்தையும் பலப்படுத்துவதாகவும் மக்கள் குலமனைத்துக்கும் மேலான வாழ்க்கையை ஏற்படுத்தப்போவதாகவும் கூறும் ஓர் அரசாங்கத்துக்கு அழகல்ல.

பீகிங்கின் குற்றச்சாட்டுக்கு இது சரியான பதில். இதற்கு ஏற்பாடு செய்தவர்களின் நகைச்சுவையைப் பாராட்ட வேண்டும். ஆனால் பீகிங், இதைப்பற்றி கோபமடைந்து, டில்லிக்கு ஆட்சேபம் தெரிவித்ததாம். எதிர்க்கட்சிகளில் இவர் இதற்கு ஒழுங்கு செய்ததாயும், இவ்வாறு ஆர்ப்பாட்டங்களை நடத்த ஜனநாயக இந்தியாவில் மக்களுக்கு சுதந்திரமுண்டென்றும் இந்தியா பதில் அளித்ததாகத் தெரிகிறது.

இனியாவது இவ்வாறு அசட்டுத்தனமான குற்றச்சாட்டுகளை சீனம் சுமத்தாமல் பெருந்தன்மையுடன் ஆசிய அமைதிக்கும் சுபீட்சத்துக்கும் சேவை செய்ய இந்த ஆர்ப்பாட்டம் ஓரளவு உதவவேண்டும்.

ஃ ஃ ஃ

புது சீனக் குடியரசின் 16-வது ஆண்டுவிழா நேற்று நடைபெற்றுள்ளது. அந்த 16 ஆண்டுகளில் புதுசீனம் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றி தோழர் சண்முகதாசன் எழுதியுள்ள ஒரு கட்டுரையில், சில நல்ல தகவல்களை கொடுத்திருக்கிறார்.

''சீனத்தில் பெரிய அதிகாரிகளும் வருடத்தில் சில காலம் உடல் உழைப்பு வேலை செய்ய வேண்டும். அதிகார மமதை வராமல் தடுக்கத்தான் இந்த ஏற்பாடு. பீகிங்கின் உபமேயர் நகர சுத்தி தொழிலாளருடன் சேர்ந்து ஒரு மாதம் வேலை செய்தார்''. இந்த முன் மாதிரியை இலங்கையிலும் நமது பல அதிகாரிகளும் பின்பற்றினால் நிர்வாகம் எவ்வளவோ நன்றாக இருக்குமல்லவா?

தலைவர் மா சே துங் உள்ளிட்டு பெரிய அதிகாரிகள் தங்கள் சம்பளங்களைப் பெரிதும் குறைத்துக்கொண்டதாகவும், சம்பள ஏற்றத்தாழ்வுகள் அநேகமாக நீங்கி, சீனம் பல விதங்களிலும் முன்னேறி உலகின் எதிர்காலத்துக்கு மேலான வழிகாட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார் தோழர்.

கேட்க மிக மகிழ்ச்சிதான். ஆனால் திபெத் மக்களை நினைத்துக்கொண்டால் அண்டையிலுள்ள நாடுகளுக்கெல்லாம் சீனத்தின்மீது எப்படி நம்பிக்கை பிறக்க முடியும்?

ஃ • ஃ ஃ

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து தரணியொடு வானாளத் தருவரேனும்,
மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம் மாதேவர்க்கேகாந்தரல்லராகில்,
அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராய் ஆவுரித்துத்தின்றுழலும் புலையரேனுங்,
கங்கைவார் சடைக்கரந்தார்க்கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே.

—அப்பர் சுவாமிகள்

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க




திருமலை மாவட்ட

## உடற்பயிற்சிப் போட்டியில் இந்துக்கல்லூரிக்கு முதலிடம்

திருகோணமலை, வெள்ளி

திருகோணமலை கிரிக்கெட் உடற்பயிற்சிக் கழகத்தினரால் அண்மையில் நடத்தப்பட்ட நான்காவதுவருட கனிஷ்ட உடற்பயிற்சிப் போட்டியில் திருகோணமலை இந்துக்கல்லூரி முதலாவது இடத்தைச் சுவீகரித்துக்கொண்டது. இப்போட்டிகளில் இந்துக்கல்லூரி, சென். யோசெப் கல்லூரி, மகாவித்தியாலயம், வெள்ளைமணல் அரசினர் பாடசாலை, அக்ரபோதி பாடசாலை, பெருந்தெருப் பாடசாலை. கிண்ணியாப் பாடசாலை, முள்ளிப்பொத்தானை அரசினர் பாடசாலை. தம்பலகமம் மகாவித்தியாலயம், கிண்ணியா மகாவித்தியாலயம், மெதடிஸ்ற் பெண்கள்பாடசாலை, ஸ்ரீசண்முகவித்தியாலயம், சென் யோயப் தமிழ்ப் பாடசாலை, யூனைட்டட் விளையாட்டுக்கழகம், சென். அந்தனிஸ் விளையாட்டுக்கழகம், றோயல் இலங்கை விமானப் படை, இலங்கை இராணுவப் படை முதலிய பல கல்லூரிகள், பாடசாலைகள், கழகங்கள் கலந்துகொண்டன.

வெற்றி வீரர்களுக்கு திருமதி வி. ஏ. சுகததாஸா விருதுகள் வழங்கினார்.

விபரம் வருமாறு:—

ஆண்கள்: 19 வயதிற்குள்: நீளம் பாய்தல்: வி. என். ஜேக்கப், எல். சி. உபசேனா, எம். பீட்டர்.

குண்டெறிதல்: எல். ஜி. உபசேனா. ஆர். ராமதாஸ்.

ஈட்டி எறிதல்: கே. தெய்வேந்திரன், ஏ. கிறிஸ்டியன், எஸ், சிவநேஸ்வரன். 200 யார் ஓட்டம்: பி. தனபாலசிங்கம், ஆர். இராஜ்குமார், 100 மீட்டர்ஓட்டம், ரி. தனபாலசிங்கம். ஜே ஸ்ரெனிஸ்லெஸ், 400 மீட்டம் ஓட்டம், ஜே, ஸ்ரெனிஸ்லெஸ், எம். பிரோஸ் சைட், உயரம் பாய்தல்: வி. வசந்தராஜா, ஏ. கிறிஸ்ரியன், தடிஊன்றிப்பாய்தல்: எம், பீட்டர், ஏ. கிறிஸ்றியன், தடைதாண்டிப்பாய்தல்: ஜி. உபசேனா, த். ராஜ்குமார், 800 மீட்டர் ஓட்டம்: என், யேக்கப், வி, வசந்தராசா, 1500 மீட்டர் ஓட்டம்: என்: ஜேக்கப், வி, வசந்தராசா, பரிதி வட்டம் வீசுதல்: கே, அலி முகமட், ஏ. பெர்னாண்டெக்ஸ்.

16 வயதிற்குள்: உயரம் பாய்தல்: எஸ். தர்மலிங்கம், ஏ. றொவின், பரிதி வீச்சல்: கே. கனகசிங்கம், எஸ், சாந்தகுமார், எஸ். காரூன், குண்டெறிதல்: எஸ். காரூன், ஏ, பசீர், 100 மீட்டர் ஓட்டம்: எஸ். மாதவராஜா, ஏ, ரகுமான். 200 மீட்டர்ஓட்டம்: ஏ. கபூர், ஏ. ரகுமான், நீளம்பாய்தல்; ஏ, ரகுமான், ஏ, ரகீம், ஈட்டி எறிதல்: ஜே. கிறிஸ்ரில், கே. கனகசிங்கம்.

பெண்கள் 19வயதிற்குள்: நீளம்பாய்தல்: பீ, சிறீமாவதி கே. நந்தசீவி, குண்டெறிதல்: பி. கிறேசிலின், எஸ். சந்திராவதி, 100 மீட்டர் ஓட்டம்: எஸ். தனலெட்சுமி, எம். இந்திரசிலி, ஈட்டி எறிதல்: என். ராஜலெட்சுமி, ஏ. கமலாதேவி, 200 மீட்டர் ஓட்டம்: எஸ். தனலெட்சுமி, எம். இந்திரசீலி, உயரம் பாய்தல்: எஸ். தனலெட்சுமி, ரி, சாந்திதேவி, 16 வயதிற்குள் உயரம் பாய்தல்: ஜின்னத்பானுயா, எஸ். விஜயரூபா, நீளம்பாய்தல்: தபேஸ்வரி, என். ராஜேஸ்வரி. 100 மீட்டர் ஓட்டம்: ஆர். யோகராசா, கே. தபேஸ்வரி 200 மீட்டர் ஓட்டம்: கே. தபேஸ்வரி' எஸ். ராஜேஸ்வரி.

அஞ்சலோட்டம் ஆண்கள்: 4X400 மீட்டர்: இந்துக்கல்லூரி, சென் யோசப் கல்லூரி, 4X200 மீட்டர்: இந்துக் கல்லூரி புதிய சாதனை, சென். யோசப் தமிழ்ப்பாடசாலை. 4X100 மீட்டர்: இந்துக்கல்லூரி (புதியசாதனை), மகா வித்தியாலயம்.

பெண்கள்: 4X100 மீட்டர்: மெதடிஸ்த்த பெண்கள் கல்லூரி, ஸ்ரீ சண்முகவித்தியாலயம், 4X200 மீட்டர்: மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி புதியசாதனை, மகாவித்தியாலயம்.

## பெல்கிரேடில் ராதாகிருஷ்ணன்

பெல்கிரேட், செப். 30

இன்று இங்கு வந்து சேர்ந்த இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. 21 மரியாதைக்குண்டுகள் தீர்க்கப்பட்டன. அணிவகுப்பு மரியாதையை அவர் பார்வையிட்டார்.

## தென் இலங்கையில் பெருமழை

கொழும்பு, வியாழன்

இரவு பகலாக தென் இலங்கையில் பெருமழைபெய்து வருவதாகவும் இதனால் இப்பகுதிகளில் பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தந்தி தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நில்வல கங்கையின் நீர்மட்டம் இன்னும் மூன்று அடி உயர்வதானால் பயிர்களுக்கு பெருத்த சேதம்விளையுமென அஞ்சப்படுகிறது.

## சாய்ப்புச் சட்டத்தை மீறியவர்கள

யாழ்ப்பாணம், சனி

சாய்ப்புச் சட்டத்தைமீறி விற்பனை நேரத்திற்குப்பின், வியாபாரம் செய்ததாக, காங்கேசன்துறை வீதியில் உள்ள அஜந்தா ஜவுளிக்கடை உரிமையாளர்கள் மூவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்பின் மாஜிஸ்திரேட், உரிமையாளர் மூவரையும் குற்றவாளிகளாகக் கண்டு தலா 40 ரூபாய் அபராதம் விதித்தார்.

வழக்கில் இப்படியான மற்றொரு குற்றவாளியாகக் காணப்பட்ட காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த ஏ. எஸ். நடராசா என்பவருக்கு 125 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

தொழில் இலாகா இன்ஸ்பெக்டர் திரு. கே. விஜயரத்தினம் வழக்கை நடத்தினார்.

## திருமலையில் நவராத்திரி விழா

திருக்கோணமலை, வெள்ளி

இம்முறை நவராத்திரி விழாவின் இறுதி மூன்றுநாட்களையும் வெகு விமரிசையாகக் கொண்டாட இங்கு பல சங்கங்களும், கல்லூரிகளும் திட்டமிட்டுள்ளன. திருக்கோணமலை சிவயோக சமாஜம், இளைஞர் அருள்நெறி மன்றம், ஸ்ரீ சண்முகவித்தியாலயம், இந்துக்கல்லூரி இந்துசபை, தட்சணகான சபா மாணவிகள், கோணேஸ்வர வித்தியாலயம் முதலியவையே மேற்கண்ட சங்கங்களும் கல்லூரிகளுமாகும்.

திருக்கோணமலைசிவயோக சமாசத்தில் நடைபெறவிருக்கும் நவராத்திரி விழா இறுதி மூன்றுநாள் நிகழச்சிகளிலும், நீதியரசர் திரு. கந்தசாமி, வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. அம்பிகைபாகன், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் கலந்துகொள்ள விருப்பதாக அறியப்படுகின்றது.

இளைஞர் அருள்நெறி மன்றமும் தனது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள நீதவான் கந்தசாமியை அழைத்திருப்பதாகத் தெரிகின்றது. சிவயோக சமாஜத்தில் திரு. இரா. சிவஅன்புவின் கதாப்பிரசங்கமும், சைவசிகாமணி பண்டிதர் திரு. இ. வடிவேலுவின் கதாப்பிரசங்கமும் நடைபெறுமெனத்தெரிகின்றது. இந்துக்கல்லூரி இந்துசபை இம்முறைநவராத்திரி விழாவை முன்னையிலும்பார்க்க வெகு விமரிசையாகக் கொண்டாடத் தீர்மானித்திருக்கிறது. பிரதம பேச்சாளர்களாகத் திரு. கணபதிப்பிள்ளை, கழகப்புலவர் திரு பெ. பொ. சிவசேகரனார், பண்டிதர் சி. வைரமுத்து ஆகியோர் கலந்துகொள்ள விருப்பதாகவும், பல இசை நிகழ்ச்சிகளும், நடனநிகழ்ச்சிகளும், நாடக நிகழ்ச்சிகளும் நடைபெற ஒழுங்கு செய்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீசண்முக வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கும் சரஸ்வதி பூஜை விழாவில் பல இன்னிசைக்கச்சேரிகளும் நடனநிகழ்ச்சிகளும், சொற்பொழிவுகளும் இடம்பெறும். ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தினர் விழாவில் பேசுவதற்கு சச்சிதானந்த மாதாஜியை அழைத்திருக்கிறது,

## இன்று

### கொக்குவில் கலாபவன நவராத்திரி விழா

மாலை 6-30 — 8-00 மங்களவாத்தியம், 8-00 — 9-30 திருமதி பரமேஸ்வரி விஜயரத்தினம் — பாட்டு, 9-30 — 9-45 திரு. எஸ். அம்பிகைபாகன் — தலைமையுரை, 9-45 — 10-15 கலைஞரைக் கௌரவித்தல், 10-15 கலாபவன மாணவிகள் — பரதநாட்டியம்.

தேவை

எமது காரியாலயத்திற்கு மனேஜர், காஷியர், பிரதிநிதிகள் தேவை. மனேஜர் பிணை: 1500/-. சம்பளம்: 175/-. காஷியர் பிணை: 2000. சம்பளம்: 160/-. பிரதிநிதிகள் பிணை 1000-. சம்பளம் 130/. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 4-10-65 காலை 9 மணிக்கு நேரில் வரவும். 'மெரிலான்ட் இன்டஸ்றீஸ், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1102

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.